தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

ரூ. 15/- | மலர் 19 - இதழ் 07 - நவம்பர் 2017 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**



மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் உதவி வழங்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் உலக வங்கியின் தெற்கு ஆசிய மண்டல துணை அதிபர் ஆய்வு

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

பெண்கள் நினைத்தால் சமூகத்தில் எதையும் சாதிக்க முடியும் என்பதை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகிய நீங்கள் நிரூபித்து வருகிறீர்கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். உங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு நமது தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமும் உறுதுணையாக என்றும் இருக்கும்.

தற்போது தமிழகத்தில் பருவமழை பரவலாக எங்கும் பெய்து வருவதால் ஆறுகள், கால்வாய்களில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. தமிழக அரசு சுமார் 100 கோடி ரூபாய்க்கும் மேலாக தற்போது ஏரி, குளங்களை தூர் வாரும் பணிகளை முடித்துள்ளது. இதனால் பெரும்பாலான ஏரிகள், குளங்கள் நிரம்பி வருவதால் விவசாயப் பெருமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வருங்காலத்தில் சிறப்பாக விவசாயம் செய்திட ஏற்ற சூழல் நிலவி வருகிறது.

வான் தரும் அமுதம் எனப்படும் இந்த மழை நீரை வீணாக்காமல் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் மூலம் சேகரிப்பது மற்றும் மழை நீருடன் கழிவு நீர் சேராமல் இருக்க அதற்கான அமைப்புகளை உருவாக்குவதும் ஒவ்வொரு குடிமக்களாகிய நமது கடமையாகும். மேலும் நம்முடைய அரசாங்கம் மழை நீரை சேமிப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அத்தகைய நடவடிக்கைகளுக்கு நாமும் நமது ஒத்துழைப்பை அளித்திட வேண்டும்.

குறிப்பாக நாம் வசிக்கும் பகுதிகளில் மழை நீர் சேகரிப்பை உருவாக்குவதுடன், நமது சுற்றுப்புறத்தில் கழிவு நீர் தேங்காமலும், குப்பைகளை கால்வாய்களில் போடாமல் அதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் கொட்டுவது, பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டைத் தவிர்ப்பது, தொற்று நோய் கிருமிகள் மற்றும் கொசுக்கள் போன்றவை உருவாகாமல் தடுக்க, நமது நீர்நிலைகளை பாதுகாப்பாகவும், சுத்த மாகவும் வைத்துக் கொள்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகிய நீங்கள், பொது மக்களுக்கு முன்னுதாரணமாக மேற்கொண்டு, சமூகத்தில் அனைவரும் ஆரோக்கியமாக வாழ்ந்திட வழிவகை செய்திட வேண்டும்.

நல்ல கருத்துக்களுடன் அடுத்த இதழில் சந்திப்போம்...

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

பாசிப்பருப்பு நெய் உருண்டை 12

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல் 06

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட செயல்பாடுகள் 08

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் உலக வங்கியின் தெற்கு ஆசிய மண்டல துணை அதிபர் ஆய்வு 35

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 15

கடன் மீட்புத் தொகையால் வாழ்வாதாரம் பெற்ற பயனாளி 34

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 29

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவற்றின் செயல்பாடுகள் குறித்து முற்றம் இதழில் வெளியிடப்படும் செய்திகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றன.

திருமதி. விஜயலட்சுமி ரவிச்சந்திரன்,
தமிழ் மகள் மகளிர் சுய உதவிக் குழு,
திருவையாறு, தஞ்சாவூர் மாவட்டம்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக பெண்களை ஒன்று திரட்டி, சுய உதவிக் குழுக்களை அமைத்து, தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்து அவர்களின் வறுமையை போக்கிடும் சிறப்பான செயல்பாடுகளை ஊரக வாழ்வாதார இயக்கம் மேற்கொண்டு வருகிறது.

திருமதி. சித்ரா பாலசுப்பிரமணியன்,
தேவராகம் மகளிர் சுய உதவிக் குழு,
மேட்டுத் தெரு, சேலம் மாவட்டம்.

தனிநபர் இல்லக் கழிப்பறையின் அவசியம் குறித்தும், திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள் குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் களப்பணியின் குரல்கள் என்ற கட்டுரைகளும், சிறுவர் கமாண்டோ படையின் செயல்பாடுகளும் சிறப்பாக உள்ளன.

தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள்,
சிறுவாணி ஊராட்சிக் கூட்டமைப்பு
சிறுவாணி, கோயமுத்தூர் மாவட்டம்.

சுனாமி என்ற பேரலையால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் இழந்து வாடிய மக்களின் துயரைப் போக்கி, அவர்களின வாழ்வில் பொருளாதார மலர்ச்சியை ஏற்படுத்தி வரும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளால் இன்று தமிழக கடற்கரை பகுதியில் வசிக்கும் மக்கள் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
கடல் மீன்கள் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 19 – இதழ் 07 – நவம்பர் 2017
விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
எஸ். அமிர்த ஜோதி, இ.ஆ.ப.,
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி
கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

எஸ். அண்ணாமலை பிரேம்குமார்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பொறுப்பாசிரியர்
சு. மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

நீர் ஆதாரத்திற்கு நீரே காரணம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

வடகிழக்கு பருவ மழை தமிழகத்தில் பரவலாக பெய்தாலும், சில மாவட்டங்களில் போதிய மழை இன்றி குறிப்பாக விழுப்புரம் மாவட்டத்தில் நீர் ஆதாரங்கள் வெறுமையாக காட்சியளிப்பதால், விவசாயிகள் ஏக்கத்துடன் மேலும் மழையை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்ற நிலை ஒருபுறம் இருக்க, மழை நீரால் பல பகுதிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி அவதிப்படும் சென்னை நகரமும், அதோடு ஏரிகள் நிரம்பி வழிவதால் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள மக்கள் மகிழ்ச்சியாகவும் உள்ளனர் என்பது மறுபுறம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சென்னை நகரம் வெள்ளத்தில் மிதந்ததை அனைவரும் நன்கு அறிந்திருந்தும், அதிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளத் தவறி விட்டோமோ என நினைக்கத் தோன்றுகிறது. சென்னை வெள்ளம் ஒரு எச்சரிக்கையாக இருந்தும் கூட, நீர் ஆதாரங்களான ஏரி, குட்டை மற்றும் குளங்கள் ஆகியவற்றிலும், வடிகால் கால்வாய்களிலும் வீடுகளைக் கட்டி விட்டதன் விளைவு, மழை பெய்தாலும் தண்ணீர் அதிகளவு தேங்கி பல்வேறு சேதங்களை உருவாக்கி வருகின்றது. இதை நன்கு உணர்ந்தும் கூட, பலர் நீர் ஆதாரங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டு அவதியுறுகின்றனர் என்பது வருத்தத்தை அளிக்கின்றது.

தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்தும், மழை நீரை சேகரிக்கும் மனப்பான்மை வளரவில்லையே என்பது வியப்பாக இருக்கின்றது. இயற்கையின் கொடையான மழைநீரை அவரவர் வீடுகள் மற்றும் வயல்வெளிகளிலும் முடிந்தவரை சேமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தயாராக வேண்டி உள்ளது. பயன்படுத்திய நீரை மறு சுழற்சி செய்து பயன்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.

புவி வெப்பமடைந்து, பருவநிலை மாறிய காரணத்தினால் பல்வேறுபட்ட பேரிடர்கள் எந்த காலக்கட்டத்திலும் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த பருவ மாற்றத்தினால் குறைந்த நாட்களில் அளவிற்கு அதிகமான மழை கொட்டித் தீர்ப்பதால் எதிர்பாராத பேரழிவுகளை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தேவைக்கு மட்டுமல்லாமல் ஆடம்பர வாழ்க்கைக்காகவும் மற்றும் ஆசைக்காகவும், மனிதர்களாகிய நாம் இயற்கையை அளவிற்கு அதிகமாக அழித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நிலத்தடி நீரை இன்று கடல் நீரை போன்று வீட்டு உபயோகத்திற்கு பயன்படாத அளவிற்கு மாசுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். நீரை விலைக்கு வாங்குவதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இப்போதாவது நீர் மேலாண்மைப் பற்றி சிந்திப்போம். ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில், 23.10.2017 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு. கே. டி. இராஜேந்திர பாலாஜி அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி அரங்கத்தைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இவ்விழாவில் மகளிர் சுய உதவிக் குழுவினரின் கைவண்ணத்தில் உருவாகிய பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் ஓவியத்தை நினைவுப் பரிசாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. நா. சரவணன் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் விருதுநகர் மாவட்ட மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன்



திருநெல்வேலி மாவட்டத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பெல் மைதானத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியின் போது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரசு துறைகளின் சார்பில் திட்ட விளக்கக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப் பட்டிருந்தன. இதில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் கண்காட்சி அரங்கும் அமைக்கப்பட்டிருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி அரங்கிற்கு வருகை தந்து, அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில், பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. அதன் ஒரு பகுதியாக திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வரும் 502 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 1269.98 இலட்சம் வங்கிக் கடனாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் வழங்கினார்கள்.

இவ்விழாவில் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள், பல்வேறு அரசு துறைகளின் அலுவலர்கள், திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. த. கெட்ஸி லீமா அமலினி அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகிவற்றின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடன் உதவி



மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் பிறந்த தின நூற்றாண்டு விழா தேனி மாவட்டத்தில் 09.11.2017 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் போது, தேனி மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட உதயம் நாணய சிக்கன சங்கம் என்ற மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வங்கி நேரடிக் கடனாக ரூ. 7 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள் வழங்கினார்கள்.

மேலும் இவ்விழாவில் மகளிர் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த கண்காட்சி அரங்கு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் திறந்து வைத்து, அங்கு வைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களை பார்வையிட்டு, அப்பொருட்கள் குறித்த விபரங்களை சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள், தேனி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. மு. கல்யாணசுந்தரம் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

விழுப்புரம் மாவட்டம், திரு. காமராஜ் நகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் இணைந்து, தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாமினை 28.10.2017 அன்று நடத்தின.

இந்நிகழ்ச்சிக்கு, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் இல. சுப்பிர மணியன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. சுந்தர்ராஜன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். மாண்புமிகு சட்டம், நீதித்துறை, சுரங்கம் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள் இம்முகாமினைத் துவக்கி வைத்து, விழாப் பேருரையாற்றி, தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த வேலை வாய்ப்பு முகாமில் 122 தொழில் நிறுவனங்களும், 11,542 வேலை நாடுனர்களும் கலந்து கொண்டதில், 5621 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் 3535 நபர்களுக்கு அன்றைய தினமே பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த முகாமிற்கான ஏற்பாடுகளை, விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநரின் ஆலோசனையின் பேரில் உதவித் திட்ட அலுவலர்கள் திரு. அ. பா. மணிவண்ணன், திரு. இரா. கமல்ராஜ், திரு. ப. குணசேகர், திருமதி.வே.சித்ரா, திரு. அ. முத்துபாண்டியன் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினரும் மேற்கொண்டிருந்தனர். ■

கல்லூரிச் சந்தை

தமிழ்நாட்டில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மாணவ மாணவியரிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன. அதன் தொடர்ச்சியாக தேனி மாவட்டத்தில், கொடுவிலார்பட்டி கம்மவார் பொறியியல் கல்லூரியில் 25.10.2017 முதல் 27.10.2017 வரை கல்லூரிச் சந்தை நடைபெற்றது.

இந்த கல்லூரிச் சந்தையினை தேனி மாவட்ட ஆட்சியர் திரு. ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். தேனி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. மு. கல்யாணசுந்தரம் அவர்கள், கம்மவார் கல்வி நிறுவனங்களின் தலைவர் திரு. நம்பெருமாள்சாமி அவர்கள், செயலாளர் திரு. பொன்னுசாமி மற்றும் பேராசிரியர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுவினர் மற்றும் மாணவ மாணவியர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த கல்லூரிச் சந்தையில் தேனி மற்றும் அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்த, ஆயத்த ஆடைகள், உணவுப் பொருட்கள், இயற்கை உணவுகள், கைத்தறி சேலைகள், கால் மிதியடிகள், மூலிகைப் பொருட்கள், பேன்சி பொருட்கள், சணல், பேப்பர், வாழை நார் ஆகியவற்றில் செய்த பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், மெழுகுவர்த்திகள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன. ■

பயிற்சி நிலையத்தின் செயல்பாடுகள் பார்வையிடல்

விழுப்புரம் மாவட்டத்தில் ஆரோவில் அருகில் இரும்பை ஊராட்சி, இடையன் சாவடி கிராமத்தில் உள்ள நிலைத்த வாழ்வாதார மேம் பாட்டிற்கான பயிற்சி மையத்தையும், அரசுக் கட்டடத்தில் பயிற்சி மையத்தை நடத்துவதற்காக இடையன்சாவடியில் அமைந்துள்ள VARSHA கட்டடங்களையும், ஆரோவில் பகுதியில் அமைந்துள்ள Earth Institute மற்றும் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் மையத்தையும், தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, பயிற்சி குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு. இல. சுப்பிர மணியன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள், விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. வெ. மகேந்திரன் அவர்கள், விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எஸ். சுந்தர்ராஜன் அவர்கள் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், பயிற்சி மையங்களின் நிர்வாகிகள் மற்றும் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் மையத்தின் நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர். ■

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டத்தின், அனைத்து ஊராட்சிகளிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக் கப்பட்டுள்ளன. மேற்படி அமைப்புகளின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்ய, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் 26.10.2017 மற்றும் 27.10.2017 ஆகிய இரண்டு நாட்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்தார்.

ஆய்வின் முதல் கட்டமாக 26.10.2017 அன்று இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து அனைத்து களப் பணியாளர்களுக்கும் மேலாண்மை இயக்குநர் அவர்களால் ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் முன்னோடி வங்கி மேலாளர் (இந்தியன் வங்கி) திரு. பாஸ்கர், கிருஷ்ணகிரி மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குநர் திரு. சி. நரசிம்மன் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத் தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா அவர்கள், JR பதிவாளர் திரு. பாண்டியன் அவர்கள், மகளிர் திட்டத்தின் உதவித் திட்ட அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வின் இரண்டாம் கட்டமாக 27.10.2017 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், கட்டிகானப்பள்ளி கிராம வறுமை ஒழிப்புச் சங்க அலுவலகத்தில் TBSDAS இணையதள பதிவேற்றம் குறித்து, மேலாண்மை இயக்குநர் அவர்கள், களப்பணியாளர்கள், சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுனர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், குருபரப்பள்ளி கிராம ஊராட்சிக்குட்பட்ட 100க்கும் மேற்பட்ட நரிக்குரவர்கள் குடும்பங்கள் வசித்து வரும், சிக்காரி மேடு கிராமத்தில் அவர்களின் வாழ்வாதார முன்னேற்றம் தொடர்பாக மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, அவர்களின் வாழ்வாதார வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, கிருஷ்ணகிரி மாவட்ட வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், அலுவலகப் பணியாளர்கள் உடன் இருந்தனர். ■

ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை 27.10.2017 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் முதலாவதாக, ஆம்பூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய காலணி உற்பத்தி தொழிற்பயிற்சி முடித்த, சுய உதவிக் குழு உறுப்பினர்கள், தங்களின் சுய முதலீட்டில் தொழில் துவங்கி. நடைபெற்று வரும் காலணி உற்பத்தி மையத்தினை பார்வையிட்டு, காலணிகள் செய்யும் விதம், காலணி உற்பத்தி செய்ய பெறப்படும் ஆணைகள், தரக்கட்டுப்பாடு மற்றும் பணியாளர்களுக்கான ஊதியம் போன்றவை குறித்த விபரங்களைக் கேட்டறிந்து, ஆய்வு மேற்கொண்டு, ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

பின்பு மாவட்ட மகமையின் செயல்பாடுகள் மற்றும் மாவட்ட மகமையில் உள்ள பணியாளர்கள் மற்றும் சமூக வல்லுநர்கள் மற்றும் அவர்கள் வழங்கும் சேவைகளையும், அதற்கான மதிப்பூதியம் பெறும் முறையையும் கேட்டறிந்து, ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து அணைக்கட்டு ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள வெல்மா கால்நடை தீவனம் உற்பத்தி மையத் தினை பார்வையிட்டு, அதன் செயல்பாடுகளை கேட்டறிந்தார். கால்நடை தீவனத் தின் தேவைக்கேற்ற வகையில் ஊராட்சி வாரியாக விற்பனை மையங்களை சுய உதவிக் குழுக்களின் மூலம் அமைக்கவும் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

நிறைவாக நெமிலி ஊராட்சி ஒன்றியம், பெரும்புலிபாக்கம் ஊராட்சியில் நெமிலி வட்டார அளவிலான கூட்டமைப்பின் மூலம் துவங்கப்பட்டுள்ள நெமிலி ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் செயல்பாடுகளை பார்வையிட்ட முதன்மை செயல் அலுவலர் அவர்கள், தையல் இயந்திரங்கள் கொள்முதல் மற்றும் சிறப்பு இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டது குறித்தும், ஆயத்த ஆடைகள் உற்பத்திக் கான ஆர்டர்கள் மற்றும் பணியாளர்களின் தினசரி ஊதியம் குறித்த விபரங்களைக் கேட்டறிந்து பல்வேறு அலோசனைகளையும் அறிவுரைகளை வழங்கினார்.

சுய உதவிக் குழுக்களின் மூலம் சுயமாக தொழில் துவங்க, இம்மாதிரி யான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளையும், உற்பத்தி வாய்ப்புகளையும், விற்பனை வாய்ப்புகளையும் வழங்க உரிய ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் மற்றும் மகளிர் திட்ட பணியாளர்கள் உடனிருந்தனர். ■

பாசிப்பருப்பு நெய் உருண்டை

சத்துமிக்க பாசிப்பருப்பு உருண்டை குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமானதாகும். சுவையான பாசிப்பருப்பு உருண்டை செய்வது எப்படி என்பதை பார்ப்போம்

தேவையான பொருட்கள்

பாசிப் பருப்பு – 2 கப், சர்க்கரை – 2 கப், நெய் – 200 கிராம், ஏலக்காய் – 6, உடைத்த முந்திரி – 50 கிராம்.

செய்முறை

ஏலக்காயை லேசாக நெய்யில் வறுத்து தோலோடு சேர்த்து மிக்சியில் பொடி செய்து கொள்ளவும். முந்திரிப் பருப்பை சிறிது நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளவும். பாசிப் பருப்பை வாணலியில் போட்டு வாசனை வரும் வரை வறுத்து ஆற வைத்து, மிக்சியில் அரைக்கவும்.

அரைத்த மாவை சலித்து எடுத்து நைசான மாவை லட்டுக்கு வைத்துக் கொள்ளவும். மிக்சியில் சர்க்கரையை போட்டு அரைத்து அதையும் மாவில் கலக்கவும்.

ஒரு தட்டில் அரைத்த மாவு, சர்க்கரை, ஏலக்காய் தூள், வறுத்த முந்திரி என அனைத்தையும் போட்டு நன்றாகக் கலந்து வைக்கவும், வாணலியில் 200 கிராம் நெய்யை ஊற்றி உருக்கவும்.

நெய் கருகாமல் சூடான உடன் அதை மாவின் மேல் ஊற்றவும். பின்னர் மாவுடன் நெய்யை கலந்து வெதுவெதுப்பான சூட்டிலேயே கையால் லட்டு போல் பிடித்து, அதை தட்டில் இட்டு ஆற வைக்கவும்.

ஆறியதும் டப்பாவில் போட்டு மூடி வைத்து சாப்பிடும்போது எடுத்துக் கொள்ளவும். 10 நாட்கள் வரை கெடாமல் இருக்கும் இந்த பாசிப்பருப்பு உருண்டை சத்து மிகுந்தது. அனைவரும் இதை விரும்பி சாப்பிடுவார்கள். ■

– திருமதி. சசிகலா ராஜமன்னார்,
மேற்கு மாம்பலம், சென்னை.

மணத்தக்காளி கீரையின் பயன்கள்

மணத்தக்காளிக் கீரையை உணவுடன் சேர்த்துக் கொண்டால், உடல் குளிர்ச்சியடையும். குறிப்பாக பூப்பெய்திய காலத்தில் சிறுமிகளுக்கு கொடுத்து வரலாம். வாரம் இருமுறை மணத்தக்காளியை உண்டு வர கடுமையான உழைப்பின் காரணமாக உடல் உள்ளுறுப்புகளில் ஏற்படும் அழற்சியைப் போக்கலாம். இந்தக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் இருதயத்தின் வலிமை கூடும், களைப்பை நீக்கி நல்ல உறக்கத்தைக் கொடுக்கும். மலச்சிக்கலில் இருந்து நிவாரணம் கிடைக்கும். கண் பார்வை தெளிவு பெறும்.

வயிற்று நோய், வயிறு உப்புசம், வாயுத் தொல்லை உடையவர்கள் மணத் தக்காளி கீரையை சமைத்து சாப்பிட்டு வந்தால், மேற்கண்ட நோய்கள் கட்டுப்படும். கீரையுடன் தேங்காய் சேர்த்து கூட்டு செய்து சாப்பிட்டு வந்தால், குடல் புண் மற்றும் சிறுநீர்ப்பை எரிச்சல் போன்ற பிரச்சனைகள் நீங்கும். மணத்தக்காளி வற்றல் வாந்தியைப் போக்கி பசியின்மையைப் போக்கும். குரலை இனிமையாக்கவும், கருப்பை வலிமை பெறவும், பிரசவத்தை எளிமைப்படுத்தவும் மணத்தக்காளி கீரை உதவுகிறது. ■

பீட்ரூட்

அதிக சத்துக்களைக் கொண்ட பீட்ரூட்டில் நிறைய மருத்துவப் பயன்கள் உள்ளன. பீட்ரூட்டின் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் அல்சர் குணமாகும். பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வந்தால் சிறுநீரகங்களும், பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

பீட்ரூட் சாறுடன் படிகாரத்தை பொடியாக்கி சேர்த்து கலந்து உடலில் எரிச்சல், அரிப்பு உள்ள இடங்களின் மேல் தடவினால், எரிச்சல், அரிப்பு மாறும். தீப்பட்ட இடத்தில் பீட்ரூட் சாறை தடவினால் தீப்புண் கொப்புள மாகாமல் விரைவில் ஆறும். பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் சிகப்பணுக்கள் உற்பத்தி அதிகரிக்கும். பீட்ரூட்டை வேகவைத்த நீரில் வினிகரைக் கலந்து சொறி, பொடுகு, ஆறாத புண்கள் மேல் தடவி வந்தால் அனைத்தும் குணமாகும். ■

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சார்பாக, திருவண்ணாமலை கோகுல கிருஷ்ணா திருமண மஹாலில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சியின் துவக்க விழா 05.11.2017 அன்று நடைபெற்றது. இக்கண்காட்சியினை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. கா. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார்.

இக்கண்காட்சி துவக்க விழாவில், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா அவர்கள் கலந்து கொண்டு, ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து விளக்கவுரையாற்றினார்.

மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் பெருவாரியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கண்காட்சியில் திருவண்ணாமலை மற்றும் பிற மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களான, ஆயத்த ஆடைகள், உணவுப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், மூலிகைப் பொருட்கள், மலைப் பொருட்கள், வாசனைப் பொருட்கள், பொம்மைகள், சணல், காகிதம், வாழை நார், பனையோலை ஆகியவற்றால் செய்யப்பட்ட பொருட்கள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன. ■

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கோலப்போட்டிகள்

தூத்துக்குடி மாவட்டத்தில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுவதையொட்டி, தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மகளிர் திட்டத்தின் சார்பில் இரண்டு கட்டங்களாக கோலப் போட்டி நடத்தப்பட்டது.

முதல் கட்டமாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் வட்டார கோலப்போட்டி நடத்தப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட அளவிலான போட்டி 13.11.2107 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் 10 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த மகளிர் குழு கூட்டமைப்புகளும், தூத்துக்குடி மாநகராட்சி மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆகியவற்றிலிருந்து தலா ஒரு குழுவும் கலந்து கொண்டன.

இப்போட்டியினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. என். வெங்கடேஷ், இ.ஆ.ப., அவர்களும், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்களும் பார்வையிட்டு, போட்டியில் கலந்து கொண்ட மகளிர் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

இப்போட்டியில் முதல் பரிசினை உமரிக்காடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும், 2வது பரிசினை ஸ்ரீ வைகுண்டம் குரங்கணி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பும், ஆழ்வார் திருநகர் சிவலார்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு 3வது பரிசினையும் பெற்றனர். தூத்துக்குடி மாநகராட்சியைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் ஆறுதல் பரிசினைப் பெற்றனர்.

இப்போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் உதவித் திட்ட அலுவலர்கள் மேற்கொண்டிருந்தனர். ■

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விழா

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மத்திய அரசின் கிராம நலன் மற்றும் தூய்மைக்கான இருவார இயக்கத்தின் ஒரு பகுதியாக கிராம மற்றும் நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடன் வழங்கும் விழா, 16.10.2017 அன்று வேலூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, ஏலகிரி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் முன்னிலை வகிக்க, வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். மாவட்டத்தின் முன்னோடி வங்கி மேலாளர் திரு. தாமோதரன் (இந்தியன் வங்கி) அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் 53 ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக 1.83 கோடி ரூபாய் வழங்கினார். ■

சன் பேபி பெட் தயாரித்தல்

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில், ஊணை வாணியம்பாடி ஊராட்சியில் ஊரி புதூர் கிராமத்தில் ஜெய் கிருஷ்ணா மகளிர் சுய உதவிக் குழு மூலம் சன் பேபி பெட் உற்பத்தி செய்யப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் சன் பேபி பெட் தயாரிப்புகளை 10.10.2017 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. பெ. பெரியசாமி அவர்கள் மற்றும் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இக்குழுவின் மூலம் தயாரிக்கப்படும் சன் பேபி பெட் பொருட்களால், குழுவின் உறுப்பினர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 350/– வரை வருவாய் ஈட்டுகின்றனர். ■

தேன் பெட்டிகள் மூலம் தேன் உற்பத்தி செய்தல்

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில், அப்புக்கல் ஊராட்சியில் செயல்படும் கிருஷ்ணா மகளிர் சுய உதவிக் குழுவினர் 50 தேன் பெட்டிகள் மூலம் தூய்மையான தேன் உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

இக்குழுவின் செயல்பாடுகளை 10.10.2017 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. பெ. பெரியசாமி அவர்கள் மற்றும் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இக்குழுவின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தரமான தேனை விற்பனை செய்து, வருமானத்தை உயர்த்த மாவட்ட ஆட்சியர் அவர்கள் சுய உதவிக் குழுவினருக்கு அறிவுரைகளை வழங்கினார். ■

முழு சுகாதார தமிழகம்
முன்னோடி தமிழகம்

களப்பணியின் குரல்கள்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி லாயல் ஆலை நடுநிலைப் பள்ளியில், கோவில்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் மாணவர்களுக்கான சுகாதாரக் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டது. மக்களுக்கு வரும் பல நோய்கள், கிருமிகளால்தான் வருகிறது. இந்தக் கிருமிகள், கைகள் மூலம் வாய் வழியாக உடலுக்குள் செல்கிறது. அதனால் கைகளைச் சுத்தமாக வைத்திருப்பது அவசியம் என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. நாள் : 01.09.2017

மாவட்ட அளவிலான தனிநபர் இல்லக் கழிவறை கட்டுமான தொழில்நுட்பம் குறித்து அலுவலர்களுக்கான மாவட்ட அளவிலான ஆய்வுக்கான ஒருநாள் பயிற்சிப் பட்டறை திருநெல்வேலி மாவட்டத்தில் 02.09.2017 அன்று நடத்தப்பட்டது.

களப்பணியின் குரல்கள்

தூத்துக்குடி மாவட்டம், ரெட்டியார்பட்டியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உதவி ஆட்சியர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்ட உலக கை கழுவும் தினத்தில் கைகளை கழுவும் பழக்கத்தின் முக்கியத்துவத்தையும் மற்றும் சோப்பினால் கைகளை கழுவும் முறையினையும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. நாள் : 13.09.2017

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு "உலக கைகழுவும் தினத்தன்று" கை கழுவும் வழிமுறைகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.

நாள் : 16.10.2017

சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை உருவாக்கிட சுவர் ஓவியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வரையப்பட்டது.

இடம்: சிவன்மலை கிராமம், காங்கேயம் வட்டாரம், திருப்பூர் மாவட்டம்.

நாள்: 09.09,2017

களப்பணியின் குரல்கள்

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டாரம், பொட்டிக்கம்பாலயம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் உலக கை கழுவும் தினத்தைப் பள்ளி மாணவர்கள் கொண்டாடினர். பின்னர் மாணவர்கள் கை கழுவும் பழக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தங்களது கைரேகைகளை பதிவு செய்ததுடன், உறுதிமொழியும் மேற்கொண்டனர். நாள் : 16.11.2017

வாழ்க்கைப் பேறு


கரும்பு ஜூஸ் கடை வைத்திருக்கும் கருப்பசாமி அன்று வழக்கத்துக்கு மாறாக காலையில் சீக்கிரமே சுறுசுறுப்பாகக் கடையைத் திறந்தார்.
என்ன கருப்பசாமி, இன்னிக்கு ரொம்ப சீக்கிரமே கடையத் தெறந்தாச்சு போல!
அதே பகுதியில், மாலையில் வடை சுட்டு விற்கும், அவரது நீண்ட நாள் நண்பர் வையாபுரிக்கு ஆச்சரியம்.
வாங்க வையாபுரி அண்ணே... இனி சாயந்திரம் நானும் வடை கடை போடலாம்னு இருக்கேன். நீங்கதான் வேண்டிய உதவி செய்யணும்.
அதுக்கென்ன கருப்பசாமி, செய்துட்டாப் போச்சி. ஆமா...என்ன திடீர்னு வடை கடை? இந்தக் கடையவே தனியா சமாளிக்க முடியலேன்னு சொல்வியே..இதுல அது வேறயா?
கொஞ்சம் கஷ்டப்பட்டு, கூட ரெண்டு காசு சம்பாதிச்சாத்தான் இனி சமாளிக்கமுடியும்ணே!
அப்படி என்னப்பா உனக்குப் பிரச்சினை?
ஒண்ணுமில்லண்ணே.. படிக்கப் போறாளே... என் மக, பள்ளிக்கூடத்துல கழிப்பறையைப் பயன்படுத்தியே பழகிட்டா. அதேமாதிரி வீட்டுலயும் கழிப்பறை கட்டணும்னு அடம்பிடிக்கிறா.
பெண்பிள்ளைகளுக்கும் அதுதான் பாதுகாப்புன்னு எனக்கே தோணுது.அதனால வீட்டுல ஒரு கழிப்பறை கட்டிடலாம்னு முடிவுபண்ணிட்டேன்
அதுக்கு எப்படியும் அம்பதாயிரம் தேவைப்படும் அதுக்குத்தான் இந்தப்பாடு.
நீ கழிப்பறை கட்டப்போறதாச் சொல்றது, ரொம்ப சந்தோசமாயிருக்கு.


ஆனா அதுக்கு அவ்வளவு செலவாகாது கருப்பசாமி...அரசு மானியம் கிடைக்கும். நீயும் இவ்வளவு கவலைப்படத் தேவையில்ல
இதுக்கெல்லாம் மானியம் கிடைக்குமா? கொஞ்சம் புரியறமாதிரிச் சொல்லுங்கண்ணே.
கருப்பசாமிக்கு தனி நபர் வீட்டுக் கழிப்பறைத் திட்டத்தையும்,அதற்கான அரசு மானியத்தைப் பற்றியும் விளக்கிக்கூறினார் வையாபுரி
இதுக்கு எப்படி முயற்சி பண்றதுன்னு...
அதெல்லாம் ஒரு விசயமேயில்ல கருப்பசாமி... கிராம ஊராட்சி அலுவலகத்துல. அதுக்கான விண்ணப்பப் படிவம் கிடைக்கும். வாங்கி, நானே பூர்த்தி செய்து தாரேன்.வேறென்ன..
கிராம ஊராட்சி அலுவலகம்
பக்கத்துத் தெருவுல உனக்கு வட கடை போட ஏற்பாடு பண்றேன்.போதுமா!
ரொம்ப நன்றி வையாபுரி அண்ணே!
அன்றைய முதல் கரும்பு சாறாகிறது. சுகாதாரம் அவர்களின் பேறாகிறது

நிலையான திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்டத்தை உருவாக்கிட ஒருநாள் பயிற்சி பட்டறை

மதுரை மாவட்டத்தில் மொத்தம் 13 வட்டாரங்களும், 420 கிராம ஊராட்சிகளும் உள்ளடக்கியது. கடந்த ஏப்ரல் மாதம் மதுரை வட்டத்தில் உள்ள ஊரக பகுதிகளில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத மாவட்டம் என்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீரராகராவ், இ.ஆ.ப., அவர்கள் அறிவித்தார்கள்.

கம்மாகரை டு கழிப்பறை (k2k) வழிகாட்டி என்ற சுகாதார இயக்கத்தின் மூலம் திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்டமாக அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அனைத்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களும், ஊக்குநர்களும் இணைந்து திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்டமாக உருவாக்கிட அரும்பணி ஆற்றினர்கள்.

திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலைத்த நிலையை நோக்கி :

“திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை நோக்கி ஒருநாள்” பயிற்சி பட்டறை 04.11.2017 அன்று மதுரை மாவட்டத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்டத்தில் உள்ள 13 வட்டாரத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் பங்கேற்றனர். குறிப்பாக, சுகாதாரம் தொடர்புடைய முக்கிய துறைகளான பள்ளிக் கல்வி, பொது மருத்துவம், சமூக நலம் போன்ற முக்கியத் துறைகளிலிருந்து அலுவலர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

“பீட்பேக் பவுண்டேசனில்” இருந்து திரு. அஜய் சின்ஹா அவர்கள் இந்த ஒருநாள் பயிற்சியின் பயிற்றுநராகப் பங்கேற்று, திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைக்கும் உத்திகளை பங்கேற்பாளர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீரராகராவ், இ.ஆ.ப., அவர்கள் இந்தப் பயிற்சியில் உறையாற்றுகையில், ‘திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை எவ்வாறு நாம் தக்க வைத்துக் கொள்கின்றோம் என்பதைப் பொறுத்து அமையும்’ என்று தெரிவித்தார்கள்.

இதைத் தொடர்ந்து பேசிய திரு. அஜய் சின்ஹா அவர்கள், திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்க சந்திக்க நேரிடும் தடைகள், தவறான புரிதல்கள் மற்றும் இவைகளைக் கலந்தாய்வு செய்து தீர்வு காணல் போன்றவை குறித்து விரிவான விளக்கவுரை வழங்கினார்கள்.

இறுதியில், மதுரை மாவட்டத்தின் கூடுதல் ஆட்சியர் அவர்கள், மதுரை மாவட்டத்தின் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைக்க தனிச்சிறப்பான திட்டத்தை அறிமுகப்படுத்தியதுடன் அதுகுறித்து எடுத்துரைத்தார்கள்.

திறந்தவெளி மலம் கழித்தலற்ற மாவட்ட ஊராட்சியை உருவாக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் :

1. கிராம அளவில் தன்னார்வலர்களை ஊக்குவித்தல்
2. கிராம அளவில் சுகாதார பயிற்றுனர்கள் மற்றும் ஊக்குநர்களை தொடர்ந்து பணி மேற்கொள்ளச் செய்தல்
3. கிராம அளவில் திறந்தவெளியில் மலம் கழிப்பவர்களைக் கண்டறிந்து கட்டணம் வசூலித்தல்

சமூக சுகாதார அணுகுமுறையில் திருவள்ளூர் மாவட்ட ஊக்குநர்களுக்கு பயிற்சி

திருவள்ளூர் மாவட்ட சுகாதார ஊக்குநர்களுக்கு சமூக சுகாதார அணுகுமுறையிலான பயிற்சி நவம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் 2ஆம் தேதி வரை, காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரில் அமைந்துள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடத்தப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. எஸ். எஸ். குமார் அவர்கள் பங்கு பெற்று, ஊக்குநர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் சுகாதாரப் பணிகளைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

“ஃபீட்பேக் பவுண்டேசன்” நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அஜய் சின்ஹா அவர்கள் இந்த பயிற்சியின் பயிற்றுநராகப் பங்கேற்று, நாற்பதுக்கும் மேற்பட்ட ஊக்குநர்களுக்கு சமூக சுகாதார அணுகுமுறைகள் குறித்து பயிற்சி அளித்தார்கள்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட பயிற்சியின் இறுதி நாளன்று, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநகரத்தின் கூடுதல் இயக்குநர் திரு. கோ. லட்சுமிபதி அவர்கள் கலந்து கொண்டு, ‘ஒரு கிராமத்தைத் தூய்மையான மற்றும் சுகாதாரமான கிராமங் களை உருவாக்குவதற்கு சுகாதார ஊக்குநர்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது’ என்பதை எடுத்துரைத்தார்கள்.

சமூக சுகாதார அணுகுமுறையிலான ஊக்குநர்களுக்கான ஒரு நாள் பயிற்சி

கடலூர் மாவட்டத்தில் சமூக சுகாதார அணுகுமுறையிலான ஒருநாள் பயிற்சி 31.10.2017 அன்று நடைபெற்றது. இந்தப் பயிற்சியில் சுமார் 80க்கும் மேற்பட்ட ஊக்குநர்கள் கலந்து கொண்டு, தங்களை சுகாதாரப் பணியில் மேம்படுத்தும் வண்ணம் பயிற்சி பெற்றனர்.

இந்த ஒருநாள் பயிற்சியில் ஏற்கனவே பயிற்சி பெற்ற ஊக்குநர்களும், பயிற்சி பெற்ற ஊக்குநர்களால் பயிற்றுவிக்கப்பட்ட ஊக்குநர்களும் பங்கேற்றனர். சமூக சுகாதார அணுகுமுறையில் பயிற்சி பெற்ற ஊக்குநர்கள் தங்கள் களப் பணியில் சந்திக்கும் பிரச்சனைகளும், அவற்றிற்கான தீர்வும் கலந்தாலோசிக்கப்பட்டு, அவைகளுக்குத் தகுந்த முறையில் ஃபீட்பேக் பவுண்டேசனிலிருந்து திரு. அஜய் சின்ஹா அவர்கள் விளக்கமளித்தார்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் உதவியோடு நடந்த இந்த ஒருநாள் கருத்தரங்கில் சுகாதாரம் சார்ந்த பிற துறைகளான பொது மருத்துவத் துறை, பள்ளிக் கல்வித் துறை, சமூக நலத்துறை போன்ற துறைகளில் இருந்து பிரதி நிதிகள் பங்கேற்று பயிற்சிக்கு ஊக்கமளித்தனர்.

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் திட்டத்தின் கீழ் பாபநாசம் வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாம், 14.10.2017 அன்று பாபநாசம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் கலந்து கொண்டு, பல்வேறு தனியார் துறை நிறுவனங்களால் பணி வாய்ப்பிற்குத் தெரிவு செய்யப்பட்ட 73 வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 20 தனியார் துறை நிறுவனங்களும், 1027 வேலை நாடுநர்களும் கலந்து கொண்டனர். அவர்களில் 259 நபர்கள் பல்வேறு பணிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர். இந்த வேலைவாய்ப்பு முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தஞ்சாவூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதலுடன், உதவித் திட்ட அலுவலர்கள் மேற் கொண்டிருந்தனர். ■

கல்லூரிச் சந்தை

ஈரோடு மாவட்டத்தில், நான்காவது கட்டமாக 04.10.2017 முதல் 06.10.201 வரை ஈரோடு வேளாளர் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரிச் சந்தை நடைபெற்றது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை மாணவ மாணவியரிடையே பிரபலப்படுத்துவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் கல்லூரிச் சந்தைகள் நடத்தப்படுகின்றன.

அதன் தொடர்ச்சியாக ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற கல்லூரிச் சந்தையில் ஈரோடு மற்றும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த 34 மகளிர் சுய உதவிக் குழுவினர் தங்களின் உற்பத்திப் பொருட்களான கோரா பட்டுப் புடவைகள், காட்டன் புடவைகள், செயற்கை ஆபரணங்கள், சணல் மற்றும் காட்டன் பைகள், மென் பொம்மைகள், சுடிதார், நைட்டி வகைகள், ஆயத்த ஆடைகள், பல்வேறு வகையான வீட்டு உபயோகப் பொருட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் பேன்சி பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களை விற்பனை செய்தனர். ■

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன்

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரத்தில் உள்ள சூரியநல்லூர் ஊராட்சியில் 29 சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. 8 சுய உதவிக் குழுக்கள் தாட்கோவின் மூலம் மானியத்துடன் கூடிய பொருளாதாரக் கடனாக ரூ. 40 இலட்சம் பெற்று முறையாகத் திரும்ப செலுத்தியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக சூரியநல்லூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு குண்டடம் கிளை கனரா வங்கி மூலம் ரூ. 38.70 இலட்சம் பெருங்கடனாக 06.11.2017 அன்று திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் தலைமையில் வழங்கப்பட்டது. இவ்விழாவில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஊராட்சி அடிப்படை விவரம் சேகரிப்புப் பணி துவக்க விழா

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், Mission Antyodaya திட்டத்தின் கீழ் ஊராட்சி அடிப்படை விவரம் சேகரிப்பு பணி துவக்க விழா 01.10.2017 அன்று பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெள்ளவேடு ஊராட்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ப. கிருஷ்ணம்மாள் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் Mission Antyodaya Swachhata Pakhwada திட்டத்தின் கைபேசி செயலியின் (Mobil App) நோக்கம் மற்றும் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் விளக்கிக் கூறினார். ■

திறன் பயிற்சி திட்ட விழிப்புணர்வு ரதம்

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், Gram Samridhi Evam Swachhata Pakhwada, DDU GKY திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி திட்ட விழிப்புணர்வு ரதத்தை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. ச. சா. குமார் அவர்கள், திருவள்ளூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. ப. கிருஷ்ணம்மாள் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் இளைஞர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

சமுதாய வள பயிற்றுநர் பயிற்சி

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், மகளிர் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் (MKSP) சோழவரம் வட்டாரத்தில் 2017-2018ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயல்பாடுகள் குறித்து சமுதாய வள பயிற்றுநர்கள் பயிற்சி, 13.09.2017 முதல் 27.09.2017 வரை தேசிய வேளாண் நிறுவனம் தொழில்நுட்ப ஆலோசகர் (NAF) மூலம் நடத்தப்பட்டது.

மேலும் சமுதாய வள பயிற்றுநர்கள் அலமாதி (சோழவரம்) பகுதியில் உள்ள மண்டல தீவன உற்பத்தி மையத்தை, களப்பயணம் மேற்கொண்டு, மாட்டுத் தீவனம் உற்பத்தி, அசோலா பயிரிடுதல், மண்புழு உரம் தயாரிப்பு மற்றும் கோ-3, கோ-4, கோ-5 தீவனப்புல் பயிரிடுதல் ஆகியவைகளைப் பார்வையிட்டு, பயிரிடும் முறை மற்றும் அதன் நன்மைகள் குறித்து தெரிந்து கொண்டனர். இப்பயிற்சியில் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர், வேளாண் அறிவுரையாளர், இளம் வல்லுநர் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

ஊராட்சி அடிப்படை விவரம் சேகரிப்பு பயிற்சி

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், Mission Antyodaya திட்டத்தின் கீழ் சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர் மற்றும் மாணவர்களுக்கான ஊராட்சி அடிப்படை விவரம் சேகரித்தல் குறித்து மாவட்ட அளவிலான பயிற்சி 29.09.2017 முதல் 29.09.2017 வரை நடைபெற்றது. இப்பயிற்சியில் Mission Antyodaya திட்டத்தின் நோக்கம், ஊராட்சி அடிப்படை விவரம் சேகரிப்பு படிவத்தை பூர்த்தி செய்தல் மற்றும் கைபேசி செயலியின் (Mobil App) பதிவேற்றம் செய்தல் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், முதன்மைப் பயிற்றுநர்கள், கணினி உதவியாளர்கள், சமூக சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு Mission Antyodaya Swachhata Pakhwada திட்டத்தின் அடிப்படை விவரம் சேகரிப்புப் பணியினை தெரிந்து கொண்டனர். ■

சமூக வல்லுநர் / சமூக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு குழந்தை பராமரிப்பு மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பயிற்சி

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், சென்னை மற்றும் யுனிசெப் நிறுவனம், சென்னை ஆகியவை இணைந்து நடத்திய, சமூக வல்லுநர் மற்றும் சமூக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, கரு உருவானது முதல் 1000 நாட்கள் வரையிலான குழந்தை பராமரிப்பு மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பயிற்சி, சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூட்ட அரங்கில் 14.09.2017 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கட்டம் 2 மற்றும் கட்டம் 3 செயல்படுத்தப்படும் மாவட்டங்களான கிருஷ்ணகிரி, விருதுநகர், தேனி, மதுரை, தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உதவித் திட்ட அலுவலர்களுக்கு (திறன் வளர்ப்பு) பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கூறிய மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட முதன்மைப் பயிற்றுநர்களுக்கு ஊட்டச் சத்தின் தேவை, திட்டம் செயல்படுத்தப்படும் விதிமுறைகள், பயிற்சிக்கான கால அட்டவணை தயாரிக்கும் முறைகள், பயிற்சி நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள், மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினை கையாளும் முறை, மாவட்ட அலகிலிருந்து மாநில அலுவலகத்திற்கு வரவு செலவு விபரங்களை சமர்ப்பிக்கும் நடைமுறைகள் குறித்து விளக்கிக் கூறப்பட்டது.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், சென்னை சார்பாக செய்யப்பட்டிருந்தது. ■

சிறப்பு வட்டிமானியம் குறித்த புத்தாக்கப் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சிறப்பு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் சார்பாக, "சிறப்பு வட்டிமானியத் திட்டம்" குறித்த ஒருநாள் பயிற்சி, 07.11.2017 அன்று ஈரோடு மாவட்ட இயக்க மேலாண்மை அலகு பயிற்சி அரங்கில் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. பாலமுருகன் அவர்களும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நிதி ஆலோசகர் திரு. திருநாவுக்கரசு அவர்களும் பயிற்சியினைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படும் திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த உதவித் திட்ட அலுவலர்கள் (திறன் வளர்ப்பு), மாவட்ட முதன்மைப் பயிற்றுநர்கள், வட்டார ஒருங்கிணைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் (BCC) ஆகியோர் கலந்து கொண்டனர். நிதி ஆலோசகர் திரு. திருநாவுக்கரசு அவர்கள், உதவித் திட்ட அலுவலர் திரு. ஜார்ஜ் அவர்கள் மற்றும் உதவி வள மேலாளர் (NRO-TNVRC) திரு. ராஜேஷ் ஆகியோர் இப்பயிற்சியினை நடத்தி னார்கள்.

இப்பயிற்சியில் சுய உதவிக் குழுக்கள் வட்டி மானியத் திட்டத்தின் பயன்பெறத் தேவையான வழிமுறைகள், வங்கியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்தி, அதன் மூலம் சிறப்பு வட்டிமானியம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள், சிறப்பு வட்டிமானியத் திட்டம் குறித்த விளக்கம், சிறப்பியல்புகள், வட்டி மானியம் குறித்த கேள்வி-பதில்கள், சிறப்பு வட்டி மானியம் குறித்து சுய உதவிக் குழுக்களின் கடன் விபரத்தினை இணையதளத்தில் மின்னேற்றம் செய்யும் வழிமுறைகள் மற்றும் வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற சுய உதவிக் குழுக்களிடமிருந்து எவ்வாறு விடுபட்ட தகவல்களை பெற்று, மீண்டும் வட்டி மானிய இணையதளத்தில் மின்னேற்றம் செய்து, சிறப்பு வட்டிமானியம் பெற்றிட நடவடிக்கைகள் எடுத்தல், சிறப்பு வட்டி மானியத் திட்டத்தின் கீழ் எவ்வாறு ஊக்கத் தொகை பெற இயலும் என்பது குறித்த விபரங்கள், வட்டி மானியம் குறித்த தொடர் பதிவேடுகள் போன்றவை குறித்து தெளிவாக விளக்கப்பட்டது.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், சென்னை செய்திருந்தது. ■

தினம்... தினம்...

உலக எய்ட்ஸ் நாள் (டிசம்பர் 01)

ஆண்டுதோறும் டிசம்பர் முதல் தேதியன்று உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் எய்ட்ஸ் நோய் மற்றும் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. உலக எய்ட்ஸ் நாள் குறித்த எண்ணக்கரு முதன்முதலில் 1988இல் நடைபெற்ற எய்ட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் உருவானது. அதன் பிறகு பன்னாட்டு அரசுகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்த நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வரு கின்றன. எய்ட்ஸ் நோய் மேலும் பரவாமல் தடுக்கவும், அதனால் ஏற்பட்ட பாதிப்புகளை குறைக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிவு காட்டவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த தினத்தின் நோக்கமாகும். எய்ட்ஸ் பாதிப்பிற்கு உள்ளானவர்களின் உணர்வுகளை மதிக்கவும், அவர் களின் உரிமைகளை மதிக்கவும் மக்களை பழக்குவதும் இதன் முக்கிய குறிக்கோளாகும்.

இந்தியாவில் எய்ட்ஸ் நோயை தடுத்திட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எய்ட்ஸ் நோயை வெற்றிக் கொள்ள 'யுவா' (Youth Unite for Victory on Aids) என்னும் இளைஞர் தேசிய இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய் தடுப்பு முயற்சியாக அனைத்து கல்லூரிகளிலும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் ஆதரவுடன் 'ரெட் ரிப்பன் கிளப்' தொடங்கப்பட்டுள்ளது. ■

பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாள் (டிசம்பர் 03)

உலக மக்கள் அனைவரும் மாற்றுத் திறனாளிகளின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதுடன், அவர்களுக்கு மேன்மையும், உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தால் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் டிசம்பர் 3ஆம் தேதியை உலகம் முழுவதும் பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் நாளாக கடைப்பிடிக்க வேண்டுகோள் விடுத்தது. அதை தொடர்ந்து 1992ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 3ஆம் தேதி பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள் தினம் கடைபிடிக் கப்பட்டு வருகிறது.

மாற்றுத் திறனாளிகளுக்கு, அரசாங்கங்களும், சேவை நிறுவனங்களும், பெற்றோரும், மற்ற மனிதர்களும் உதவுவதும், அவர்களுக்கும் மற்றவர்களைப் போல் அனைத்து உரிமைகளையும் பெற்றுத் தருவதும் ஒரு சமுதாயக் கடமை என்ற விழிப்புணர்வு ஊட்டுவதே இத்தினத்தினத்தின் நோக்கமாகும்.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் மேம்பட நமது மத்திய மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு மையங்கள், மறுவாழ்வு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பணியாற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு விருதுகள் போன்றவை வழங்கப்படுகின்றன. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு சம உரிமைகள் வழங்க சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. ■

மனித உரிமைகள் நாள் (டிசம்பர் 10)

ஐக்கிய நாடுகள் சபை 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் நாள் உலக மனித உரிமைப் பேரறிக்கை என உலக மக்கள் அனைவருக்குமான வாழ்வுரிமைகளை பிரகடனப்படுத்தியது. அந்த நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் தேதி உலக நாடுகள் அனைத்தாலும் 'மனித உரிமைகள் நாள்' கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொரு தனி மனிதனும் தான் வாழ்வதற்கான உரிமையைப் பெறுவதும், மற்ற மனிதரையும் வாழ விடும் நெறிமுறையை உணர்த்துவதுமே இப்பிரகடனத் தின் முக்கிய கருத்தாகும். எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்களாகவும், உரிமையிலும் கண்ணியத்திலும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதை இப்பிரகடனம் வலியுறுத்துகிறது.

இனம், நிறம், பாலினம், மொழி, மதம், நாடு, அரசியல், சமுதாய தோன்றல், சொத்து, பிறப்பு அல்லது சமூக உயர்வு போன்ற எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஒவ்வொரு மனிதனும் வாழ்வதன் அவசியத்தை உணர்த்தவே இந்நாள் கொண்டாடப்படுகிறது. ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/-
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/-
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/-

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/-
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/-
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/-
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/-

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் மாத இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு 2017 அக்டோபர் மாதம் முடிய நிர்ணயித்த இலக்கை எய்தி முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாவட்டங்கள்

1) **தூத்துக்குடி மாவட்டம்**
2) **நாகப்பட்டினம் மாவட்டம்**
3) **தஞ்சாவூர் மாவட்டம்**
4) **திருச்சிராப்பள்ளி மாவட்டம்**
5) **வேலூர் மாவட்டம்**

இந்த மாவட்டங்களுக்கு முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட அலுவலர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவித் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஒத்தத் தொழில் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

குழுவால் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி

நீலகிரி மாவட்டம், மேல்குந்தா ஊராட்சியில் உள்ள அம்பேத்கார் நகரில் வசித்து வருபவர் ராஜரத்தினம். மனைவி பெயர் சௌபாக்கியவதி. இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். சர்க்கரை நோயின் காரணமாக ராஜரத்தினத்தின் கால் பாதிக்கப் பட்டதால், எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வந்தார். அப்போது சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், அக்குழுக்களின் மூலம் செயல்படுத்தும் தொழில் நடவடிக்கைகள் மூலம் எவ்வாறு வருவாய் பெருக்கம் ஏற்படுத்தலாம் என்பதையும் தங்கள் பகுதியின் அருகில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் மூலம் அறிந்து கொண்டார்.

அதன் அடிப்படையில் தனது மனைவியை மகளிர் சுய உதவிக் குழுவில் இணைத்து, அதன் மூலம் வாழ்வாதார வளர்ச்சி பெறலாம் என்று நினைத்த ராஜரத்தினம், அப்பகுதியில் உள்ள 13 பெண்களை இணைத்து ரோஜா மலர் என்ற பெயரில் சுய உதவிக் குழுவினைத் துவக்கினார்.

குழு துவங்கி ஆறு மாதங்கள் கழித்து, முறையாகத் தர மதிப்பீடு செய்யப்பட்டு சுழல் நிதி பெறப்பட்டது. அச்சுழல் நிதி குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் சிறு தொழில் தொடங்க வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1 வருடம் கழித்து, ரூ. 5 இலட்சம் வங்கிக் கடன் பெறப்பட்டு, அந்தத் தொகையைக் கொண்டு குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தேயிலைத் தோட்டம் ஒன்றை குத்தகைக்கு எடுத்து, அதை முறையாகப் பராமரித்து, போதிய வருவாய் பெற்றதுடன், வங்கிக் கடனையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

இச்சூழ்நிலையில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது மேற்கண்ட வட்டாரத்தில் செயல்பாட்டிற்கு வந்தது. இதில் ராஜரத்தினத்தின் பெயர் மாற்றுத் திறனாளிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டது. ராஜரத்தினத்தின் மனைவி திருமதி. சௌபாக்கியவதி ரோஜா மலர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர் என்பதால், அவரின் மூலம் அவரின் கணவர் ராஜரத்தினத்திற்கு ரூ. 10,000/- கடன் வழங்கப்பட்டது.

இத்தொகையைக் கொண்டு, ராஜரத்தினம் தனது பகுதியில் ஒரு பெட்டிக் கடை துவக்கி, வீட்டிற்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களையும் சில்லறை விலையில் விற்பனை செய்ய ஆரம்பித்தார். தற்போது இந்தக் கடையின் மூலம் நாள் ஒன்றிற்கு ரூ. 500/- வரை வருமானம் பெற்று வருகிறார். தற்போது ராஜ ரத்தினத்தின் குடும்பம் வறுமையின் பிடியில் இருந்து விடுபட்டுள்ளது. மாற்றுத் திறனாளியான தனக்கு வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு ராஜரத்தினம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ■

மாற்றுத்திறனாளியின் மகிழ்ச்சி...

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியம், அலகரை ஊராட்சியில் வசித்து வரும் மணிகண்டன் என்பவர் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர். மாற்றுத் திறனாளியான இவர் எம்.சி.ஏ., பி.எட்., படித்துள்ளார். ஸ்டார் என்கின்ற சிறப்புக் குழுவில் உறுப்பினராக உள்ளார்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் அலகரை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் ரூ. 10,000/- கடன் பெற்று, மடிக்கணினி ஒன்று வாங்கி, அதன் மூலம் அலகரை மற்றும் சீனிவாசநல்லூர் களப்பகுதி சார்ந்த ஊராட்சிகளுக்கு ஏழை மக்களை மக்கள் பங்கேற்புடன் கண்டறிதல் அட்டை (PIP Cart /Data Online Entry) செய்து வந்துள்ளார்.

அத்துடன் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் அமைக்கப்பட்ட புதிய சுய உதவிக் குழுக்கள் பற்றிய விபரங்கள் இணையதளத்தில் மின்னேற்றம் செய்து (Online entry of New Group) வருவாய் பெற்று வருகிறார். மேற்கண்ட தொழிலை விரிவுபடுத்துவதற்காக, மூன்று சக்கர வாகனம் வேண்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திடம் மனு கொடுத்ததின் பேரில், அவருக்கு மூன்று சக்கர வாகனம் (ஸ்கூட்டி) வாங்கித் தரப்பட்டது. இந்த வண்டி மூலம் மணிகண்டன் தனது தொழில் தொடர்பாக பல்வேறு இடங்களுக்கு செல்ல பெருதவியாக இருக்கிறது.

மேற்கண்ட தொழிலில் பெற்ற அனுபவம், மக்கள் தொடர்பு போன்றவற்றின் அடிப்படையில், வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக செயல்படுத்தப்படும் வட்டார அளவிலான பொது இ-சேவை மையத்தில் கணினி இயக்குபவர் பணி கிடைத்துள்ளது.

இந்த இ-சேவை மையத்தின் மூலம் வருமான சான்று, சாதி சான்று, திருமண உதவித் தொகை திட்டம், இருப்பிட சான்று, குழந்தை பாதுகாப்புத் திட்டம், பட்டா மாற்றம், சிட்டா, புது குடும்ப அட்டை விண்ணப்பித்தல், உறுப்பினர் சேர்த்தல், நீக்குதல், ஊனமுற்றோர் அடையாள அட்டை பதிவு செய்தல் போன்ற பணிகளை மணிகண்டன் சிறப்பாக செய்து மாதந்தோறும் எட்டாயிரம் வரை வருவாய் பெற்று வருகிறார். ■



சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

அரசு மற்றும் தனியார் நலத் திட்டங்களை பெற்றுத் தரும் உரிமை வழிகாட்டியின் கைபேசி செயலி

மக்களின் தகுதி அடிப்படையில் (கல்வி, வயது, வறுமை, சமூகம் மற்றும் இதர அரசு மற்றும் தனியார் நலத் திட்டங்களை, அவர்களின் இருப்பிடத்திலிருந்தே கைபேசி மூலமாக அறியவும், தேவையான அனைத்து ஆவணங்களையும் பெற்று திட்டத்தின் பயன்களைப் பெறவும் உரிமை வழிகாட்டித் திட்டம் உதவுகிறது.

இத்திட்டமானது ஏற்கனவே இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு வருவதால், இதனை தற்போது தமிழகத்தில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படும் காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் கடந்த 08.09.2017 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 03.11.2017 அன்று முதன்மை செயலானர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களால் இத்திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர் திரு. ஆர். ரவிச்சந்திரன், உரிமை வழிகாட்டி நிறுவனத்தின் தலைமை தொழில் நுட்ப அலுவலர் திருமதி. ஆஷா கிருஷ்ணன், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மேலாளர் திருமதி. இலட்சுமி இராமச்சந்திரன், தலைமை பயிற்சியாளர் பூஜா ஈஸ்வரி மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வின் போது, இதுநாள் வரை சுமார் 25 வழிகாட்டிகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட 25 உரிமை வழிகாட்டிகள் சுமார் 261 குடும்பங்களின் அடிப்படை விவரங்களை கைபேசி செயலியில் பதிவு செய்து, அவர்களுக்கான நலத்திட்டங்கள் என்னென்ன என்பதைக் கண்டறிந்து, பயன் பெற வழிவகை செய்துள்ளனர்.

மேலும் அவர்கள் குறைந்தபட்சம் ரூ. 500/– முதல் ரூ. 2975/– வரை வருமானம் ஈட்டியுள்ளனர் என விவரிக்கப்பட்டது. மேலும் இதன் வெற்றியைத் தொடர்ந்து மீதமுள்ள திட்டம் செயல்படும் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தினார். ■

நுண்தொழில் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வாழ்வாதாரம் பெற்ற பயனாளியின் வெற்றிக் கதை (ஹாலோ பிளாக் தயாரித்தல்)

காஞ்சிபுரம் மாவட்டம், வாயலூர் கிராமத்தில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று, ஹாலோ பிளாக் தொழில் செய்து வரும் திருமதி. லட்சுமி தன் வாழ்க்கையில் அடைந்த வெற்றியைக் குறித்து கூறியதாவது,

"என் பெயர் லட்சுமி, நான் ஏழுமலையான் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். சுயமாகத் தொழில் தொடங்க திட்டத்திலிருந்து வட்டி யில்லா கடனாக ரூ. 3,00,000/-மும், வங்கிக் கடனாக ரூ. 99,000/-மும், என்னுடைய பங்குத் தொகையாக ரூ. 72,500/-மும் என மொத்தம் ரூ. 4,71,500/- திட்ட மதிப்பீட்டில் 'லிவிங் ஸ்டோன் ஹாலோ பிளாக்' என்ற பெயரில் 12.12.2013 அன்று தொழில் தொடங்கி, இதுநாள் வரை வெற்றிகரமாக செய்து வருகிறோம். இதுவரை வருமானமாக ரூ. 72,25,642/-ம். அதில் இலாபமாக ரூ. 3,07,500/-ம் கிடைத்துள்ளது.

இவற்றிலிருந்து சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கடன் தொகை ரூ. 3,00,000/-த்தை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் திருப்பிக் கட்டியுள்ளேன். மேலும் கூலி வேலைக்கு சென்ற என்னை முதலாளியாக மாற்றியது மட்டுமின்றி தொழிலுக்குத் தேவையான லாரி ஒன்றும் புதிதாக வாங்கியுள்ளேன். இதனால் எனது வருவாய் மேலும் பெருகியுள்ளது. என்னுடைய இரண்டு மகன்களையும் பி.இ. படிக்க வைத்துள்ளேன். இத்தனை வாய்ப்புகளை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்கள் குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார். ■

துயர் குறைப்பு நிதியினை திரும்ப செலுத்துவதற்கான சிறப்பு முகாம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்குட்பட்ட கடலோர மாவட்டங்களில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு இயற்கைப் பேரிடர், தனிநபர் வாழ்வாதாரத்திற்கு பேரழிவு, குடியிருப்பு நட்டம் மற்றும் கால்நடை நட்டம் ஆகியவை ஏற்படும் போது, 6% வட்டியுடன் கூடிய கடனாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வாயிலாக கடலோர பகுதிவாழ் மக்களுக்கு துயர் குறைப்பு நிதி வழங்கப்பட்டு வருகிறது.

இதில் கடன் திரும்ப செலுத்துவதில் உள்ள தொய்வு கண்டறியப்பட்டு, அதனை திரும்ப செலுத்துவதற்கு கூட்டமைப்பு வாயிலாக சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. அதில் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் கடன் திரும்ப பெறப்பட்டுள்ள விபரம் கீழ் வருமாறு.

வ. எண்.	மாவட்டத்தின் பெயர்	கடன் திரும்ப செலுத்தப்பட்ட தொகை ரூ. (இலட்சத்தில்)
1	திருவள்ளூர்	2.85
2	காஞ்சிபுரம்	1.04
3	விழுப்புரம்	0.65
4	கடலூர்	2.79
5	நாகப்பட்டினம்	8.31
6	கன்னியாகுமரி	0.37
	மொத்தம்	16.01

கடன் திருப்பத் தொகையினை தற்போது வெள்ளத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு மறு கடனாக வழங்குவதற்கு முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ■

கடலில் மீன் வளத்தைப் பெருக்க செயற்கைப் பவளப் பாறைகள் அமைக்கும் பணி துவக்கம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட கடலில் மீன் வளத்தை பெருக்கும் நடவடிக்கையாக செயற்கை பவளப் பாறைகள் ரூ. 26.20 இலட்சத்தில் உருவாக்கப்பட்டன.

அதனடிப்படையில் சிமெண்ட் கலவையால் உருவாக்கப்பட்ட செயற்கை பவயப் பாறைகள் மத்திய கடல்சார் மற்றும் மீன்வள ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகளின் தொழில் நுட்ப ஆலோசனையின்படி வடிவமைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்ட செயலாக்க அலுவலர் மற்றும் மீன் வள ஆராய்ச்சி மைய விஞ்ஞானி திரு. ஜோ. கீழக்கூடன் ஆகியோர் முன்னிலையில் 06.11.2017 அன்று கோவளம் ஆழ்கடல் பகுதியில் செயற்கைப் பவளப் பாறைகள் நிலைநிறுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்படும் பவளப் பாறைகளில் ஒரு மாதத்திற்குள் பாசிகள் படியும். இந்த பாசிக்கு உள்ளே சின்ன சின்ன மிதவைப் பிராணிகள் உருவாகும். இவற்றை உண்ண வரும் மீன்கள் செயற்கைப் பவளப் பாறைகளின் இடுக்குகளில் முட்டையிட்டு, இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும். பெரிய மீன்களின் தாக்குதல்களில் இருந்து சிறிய மீன்கள் தப்பிக்கவும் இது பயன்படும். இதையடுத்து 3 மாதங்களில் இப்பகுதியில் மீன் வளம் பெருகும். அதனால் கோவளம் மற்றும் பள்ளம் ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

மீனவ பெண்களின் கையால் பின்னப்படும் மீன்பிடி வலை செய்யும் தொழில்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் கன்னியாகுமரி மாவட்ட மீனவ முன்னேற்ற சங்கங்களின் சம்மேளனம் (KDFSF) மூலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாவட்ட செயலாக்க அலுவலர் மேற்பார்வையில் நீரோடி மீன் விற்பனை சங்கத்தில் வைத்து கையால் பின்னப்படும் மீன் பிடி வலை தொழில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மீன் பிடி வலைக்கான நூல், மீனவ கூட்டமைப்பின் மூலம் மொத்தமாகக் கொள்முதல் செய்யப்பட்டு, ஐந்து நபர்கள் கொண்ட வலைப்பின்னும் மகளிருக்கான கூட்டுப் பொறுப்புக் குழு தேர்வு செய்யப்பட்டு, தேவைக்கேற்ப நூல் எடையிட்டு பகிர்ந்தளிக்கப்படுகிறது. மீன்பிடி வலைகள் பின்னி முடிவடைந்த பின்னர், நீரோடியில் உள்ள மீனவர் முன்னேற்ற சங்க நிறுவனத்தில் அவற்றைப் பெற்று, ஒரு கிலோ கிராம் ரூ. 200/- என்ற அடிப்படையில் கூலித் தொகை கணக்கிடப்பட்டு, மீனவ கூட்டமைப்பு மூலம் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் வங்கிக் கணக்கில் அத்தொகை வரவு வைக்கப்படுகிறது.

தற்போது, இத்திட்டத்தின் மூலம் நீரோடி, மார்த்தாண்டனம்துறை, வள்ளவிளை, இரவிபுத்தன் துறை, சின்னத்துறை, தூத்தூர் ஆகிய பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள 155 குழுக்களைச் சார்ந்த 775 பயனாளிகளுக்கு 12,140.904 கிலோ கிராம் எடையுள்ள நூல் வழங்கப்பட்டு, தொடர்ச்சியாக தொழில் செய்து வருமானத்தை ஈட்டி வருகின்றனர். இதன் மூலம் மீனவப் பெண்களின் வாழ்வாதாரம் மேம்பட்டு வருகிறது. மேலும் மீனவ சங்கங்களின் கூட்டமைப்பிற்கு ரூ. 2,82,000/- நிகர வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டமானது மீனவப் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ■

புதிய மாவட்டங்களில் திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வு

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் புதியதாக ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 01.11.2017 மற்றும் 02.11.2017 ஆகிய தேதிகளில் புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்ட செயலாக்க அலுவலகப் பணியாளர்கள் மற்றும் கூட்டு வள மைய பணியாளர்களுக்கான பணிகள் மற்றும் பொறுப்புகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் குறித்த காலக்கெடுவிற்குள் கீழ்காணும் பணிகளை முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

1. கூட்டு வள மையத்திற்கான அலுவலகத்தை அமைத்தல். மேலும் அதற்கான கணினி மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட வேண்டும்.
2. மாவட்டத்தின் கீழுள்ள கடலோர கிராமங்களில் குடும்ப அளவிலான அடிப்படை கணக்கெடுப்பு மற்றும் தர வரிசை, வாழ்வாதார வரைபடம் மற்றும் நுண்திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, அதன் விவரங்களை கணினியில் பதிவு செய்தல் வேண்டும்.
3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறு சீரமைத்தல், கூட்டமைப்பு முறைப்படி பதிவு செய்தல், நிர்வாகிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கான கையேடுகள் / கணக்குப் பதிவேடுகள் மற்றும் பயிற்சிகள் வழங்குதல்.
4. கூட்டமைப்பின் கீழுள்ள சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து, கூட்டமைப்புடன் இணைத்தல்.
5. சுய உதவிக் குழுக்களிலிருந்து தொழில் செய்ய விருப்பமுள்ள / ஒத்தக் கருத்துடைய 4 அல்லது 5 உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து, ஒரு கூட்டுப் பொறுப்புக் குழுவாக உருவாக்கப்பட்டு, வங்கியுடன் கடன் இணைப்பு ஏற்படுத்துதல்.
6. மீனவ சங்கங்களை உருவாக்கி செயல்படுத்தப்பட வேண்டும்.

மேலும், கடற்பாசி வளர்த்தல், சுய உதவிக் குழுக்களுக்கான வங்கி இணைப்பு மற்றும் குழுக்களை தணிக்கை செய்தல் போன்ற பணிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்களைப் பொறுப்பாக்கி இம்மாத இறுதிக்குள் விரைந்து முடித்திட கூடுதல் இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. ■

மரம் வளர்ப்போம்... மழை பெறுவோம்...

ஒரு நாட்டில் மழைவளம் பெருக வேண்டுமென்றால், வன வளம் வேண்டும். மழையின்றி எந்த ஒரு நாடும் செழித்திட முடியாது. ஒரு நாட்டில் அல்லது மாநிலத்தில் 33 சதவீதம் வனவளம் மற்றும் மர அடர்த்தி பரப்பு இருக்க வேண்டும்.

மரம் நடுவது என்பது மிகச்சிறந்த செயல் அதில் எந்த சந்தேகமுமில்லை. தற்போது பூமியில் வெப்பத்தின் அளவு அதிகரித்து வரும் வேளையில் இயற்கையின் அருமையை இன்னும் உணராமல் இருப்பது தான் தவறு. பல தலைமுறைகள் தாண்டி ஏரிக்கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும் நிமிர்ந்து நிற்கும் மரங்களின் பின்னே நமது முன்னோர்களும், மூத்தக் குடிமக்களும் வேர்களாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஒவ்வொரு மரத்தின் வேர்கள், கிளைகள், இலைகளில் எல்லாம் இயற்கையின் ஆயுள் ரேகை படிந்து இருக்கின்றது.

இன்று நம் கண்ணெதிரே மரங்கள் வெட்டப்படுவதைப் பார்க்கிறோம். காடுகள் அழிவதைக் காண்கிறோம். காடுகள் இல்லையென்றால் நாடுகள் இல்லாதவையாகிவிடும். மனிதன் நாகரிகத்தில் தன்னை மட்டும் வளர்த்துக் கொண்டு மரங்களை மறந்ததால், மழை பொழியாமல், தண்ணீர் இல்லாமல் அல்லல்படுகிறான்.

மரங்கள் வெளிவிடும் காற்றை நாம் சுவாசிக்கிறோம். நாம் வெளிவிடும் காற்றை மரங்கள் சுவாசிக்கின்றன. இந்த வகையில் நம்மை நாம் காத்துக் கொள்ள மரங்களைக் காப்பாற்ற வேண்டும்.

மரங்களால்தான் மழை போன்ற அறிவியல் உண்மைகள் பெரும்பாலான மக்களை சென்றடையவில்லை. வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தால் நம் நாடு பசுமை நாடாக மாறும். விவசாயம் செழிக்கவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேம்படவும், மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும் மரம் நடுவதன் அவசியத்தை மக்கள் அறிந்திடச் செய்ய வேண்டும்.

ஒரு சிறிய கிராமத்தில் ஓர் அரச மரம் இருந்தாலே அதிகப்படியான பிராண வாயுவை அந்த மரம் உற்பத்தி செய்து கொடுத்து, காற்றில் கரியமில வாயுவின் அளவைக் கட்டுப்படுத்தி அந்தக் கிராம மக்களின் சுகாதாரத்தினைப் பேணி காக்கும் அற்புதத் திறன் படைத்தது.

தினந்தோறும் 20 மணி நேரத்திற்கும் அதிகமாக ஒளிச்சேர்க்கையில் பிராண வாயுவை உற்பத்தி செய்யும் புல் வகையைச் சேர்ந்த மூங்கில் தினந்தோறும் ஓரடி நீளம் வரை வளரக் கூடிய தன்மை படைத்தது. தினமும் 24 மணி நேரமும்பிராண வாயுவையும், அதன் மூலக்கூறான ஓசோனையும் உற்பத்தி செய்யும் துளசிச் செடியையும் நமது முன்னோர்கள் வீடுகளில் மாடங்களை அமைத்து வளர்த்து வந்துள்ளனர்.

இன்று நமக்கு பெரும் சவாலாக இருப்பது சீமைக் கருவேல மரமாகும். இந்த மரம் பெருமளவு நிலத்தடி நீரை உறிஞ்சக் கூடியது. காற்றிலுள்ள நீரையும் உறிஞ்சும் தன்மை வாய்ந்தது. இந்த மரத்தினை வளர்ப்பதை தவிர்க்க வேண்டும். சீமைக் கருவேல மரங்களை அழிக்க முன் வர வேண்டும்.

நாம் வாழும் பூமியைக் குளிர்விக்க மழை அவசியம். மழை பொழிய மரங்கள் அவசியம். வனம் இருந்தால் மழை பொய்க்காது பொழியும். இயற்கை தழைக்கும். எனவே பயனுள்ள மரங்களை வளர்ப்போம். மழை பெறுவோம். பூமியின் சுற்றுச் சூழலைக் காத்திடுவோம்.

திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்.ஏ., எம்.எட்.,
முதுகலை பட்டதாரி ஆசிரியை,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, திருவஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

மீன்பிடி உபகரணங்களுக்கான காப்பீடுத் திட்டம்

நாட்டுப் படகின் மூலம் மீன்பிடி தொழில் செய்யும் சிறு மற்றும் குறு மீனவர்கள் தங்கள் உடமைகளுக்கு சேதம் ஏற்படும் போது அதை ஈடு செய்யும் விதத்தில் எந்தவித காப்பீட்டு நிறுவனங்களும் முன்வரவில்லை என சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநரிடம் கோரிக்கை வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து காப்பீட்டு நிறுவனங்களை அழைத்து ஆலோசனை செய்ததில், யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் நமது வேண்டுகோளுக்கிணங்க, திட்டத் திற்கான சிறப்பு காப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கி, புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 26.04.2017 அன்று மேற்கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதன் செயல்பாடுகள் கடந்த 07.11.2017 அன்று கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் ஆய்வு செய்யப்பட்டது. அதில் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் அலுவலர்கள், மீனவ சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

இதுநாள் வரை எத்தனை நபர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்துள்ளனர், ஏதேனும் இழப்பீட்டுத் தொகை பெறப்பட்டுள்ளனவா, திட்டத்தின் மூலம் காப்பீட்டு நிறுவனத்தின் வாயிலாக ஏதேனும் தொய்வு மற்றும் இடர்பாடுகள் உள்ளனவா என்பதை பயனாளிகளிடம் கேட்டு நிவர்த்தி செய்யுமாறு காப்பீட்டு நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் குறைந்த பிரீமியக் கட்டணம் (1%) மற்றும் சமுதாய அமைப்புகளின் பங்களிப்புடன் கூடிய இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்மூலம் நாட்டுப் படகு மீனவர்கள் குறைந்த செலவில் விரைந்து நிவாரணப் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டுக்குள் தங்கள் மாவட்டங்களிலுள்ள அனைத்து நாட்டுப் படகு மீனவர்களையும் இத்திட்டத்தில் இணைக்க மாவட்ட அளவிலான மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. ■

இதய நோய்கள் வராமல் தடுத்திட...

இந்தியாவைப் பொறுத்த வரை இதய நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதைத் தடுக்கக் கூடிய, கட்டுப்படுத்தக் கூடிய இயற்கை வைத்தியத்தைக் காண்போம்.

1. தினமும் காலை வெறும் வயிற்றில் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தாலே, இதய நோயிலிருந்து நிவாரணம் பெறலாம். வெறுமனே நெல்லிக்காய் சாப்பிட முடியாவிட்டால், நெல்லிக்காயுடன் இஞ்சி சேர்த்து அரைத்து, எலுமிச்சைச் சாறு கலந்து, சர்க்கரை, தேவைப்பட்டால் உப்பு சேர்த்து, தண்ணீர் கலந்து காலையில் டீ சாப்பிடுவதற்கு பதிலாக இந்த ஜூஸைக் குடிக்கலாம்.
2. வாய்வுக் கோளாறு உள்ளவர்கள் ஒரு முழுப் பூண்டை தீயில் சுட்டு, வெந்ததும் சாப்பிட்டு வந்தால், உடனடியாக நிவாரணம் கிடைக்கும். இதே பூண்டை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், இரத்தக் குழாயில் உள்ள கொழுப்பை குறைப்பதோடு, இதயத்துக்கும் வலுவூட்டும்.
3. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் சிறிதளவு இஞ்சிச் சாறுடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால், அடுத்த 5, 10 நிமிடத்தில் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் வரும்
4. இதயம் பலவீனமாக இருப்பவர்கள், காய்ந்த திராட்சைப் பழத்தை, பன்னீரில் ஊற வைத்து, சிறிது நேரம் கழித்து பிசைந்து வடிகட்டி, கொஞ்சம் கொஞ்ச மாகக் குடித்து வந்தால் நிவாரணம் கிடைக்கும்.

தொகுப்பு – செல்வி. ர. கமலம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திட்டத்தின் மூலம் கடன் மீட்புத் தொகை பெற்று வாழ்வாதாரம் அடைந்த பயனாளி

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழுள்ள திருவள்ளூர் மாவட்டம், வைரவன் குப்பம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த அஜித் என்ற மீனவர் கூறியதாவது,

“எனது பெயர் அஜித், நான் வழக்கமாக மீன் பிடித்து கந்து வட்டிக்காரர்களிடம் வட்டிக்கு பணம் பெற்று, இடைத்தரகர்கள் மூலம் மீன் விற்பனை செய்து வந்ததால், பிடித்து வரும் மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்காத சூழ்நிலையும், அதிக கமிஷன் தர வேண்டிய சூழ்நிலையும் இருந்ததால், பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்தேன்.

இந்நிலையில் திருவள்ளூர் மீனவ சங்கங்களின் கூட்டமைப்பில் எங்கள் பகுதியைச் சேர்ந்த 46 மீனவ உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து, பவானி அம்மன் மீனவ முன்னேற்ற சங்கம் ஆரம்பிக்கப்பட்டு, இத்திட்டம் மூலமாக நான், எங்கள் சங்கத்தின் மூலமாக ரூ. 30,000/– கடன் மீட்புத் தொகை பெற்று, அதன் மூலம் கந்து வட்டி நபர்களிடம் இருந்து விடுதலை பெற்று விட்டதால், சங்கத்தின் மூலமாக நான் பிடிக்கும் மீன்களுக்கு நியாயமான விலை கிடைக்கிறது. இது மட்டும் இல்லாமல், பொருளாதார முன்னேற்றமும், சேமிப்புப் பழக்கமும் ஏற்பட்டு, நான் பொருளாதார ரீதியாகவும், மனரீதியாகவும் முன்னேற்றம் அடைந்துள்ளேன்” என மீன்பிடி தொழில் செய்யும் அஜித் தனது வெற்றிக் கதையைக் கூறுகிறார். இதுநாள் வரை இத்திட்டத்தின் வாயிலாக சுமார் 2200 மீனவர்களுக்கு ரூ. 660 இலட்சம் கடன் மீட்புத் தொகை வழங்கப்பட்டு, பயன் பெற்றுள்ளனர். ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (67,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் உலக வங்கியின் தெற்கு ஆசிய மண்டல துணை அதிபர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட, உலக வங்கியின் தெற்கு ஆசிய மண்டலத்தின் துணை அதிபர் திருமதி. அன்னட்டி டிக்ஷன் அவர்கள், 02.11.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள Intimate Fashion Pvt Ltd நிறுவனத்திற்கு வருகை தந்தார். அந்த நிறுவனத்தில் புதுவாழ்வு திட்டத்தின், இளைஞர் வேலை வாய்ப்புத் திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2500 பெண்கள் வேலை செய்து, பயன் பெறுவதைக் கண்டு வியந்து புதவாழ்வுத் திட்டத்தினைப் பாராட்டினார்.

கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரம் மேம்பட புதுவாழ்வு திட்டம் இளைஞர்களை (ஆண் / பெண்) கண்டறிந்து, அவர்களுக்கு Need Assessment செய்து, கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் வாயிலாக திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு பயிற்சி பெற்ற இளைஞர்களை வைத்து, மாவட்டந்தோறும் பல்வேறு பணி அளிக்கும் வகையில் உள்ள நிறுவனங்களைக் கண்டறிந்து, Job Mela மற்றும் Job Fare ஆகியவற்றை சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் நடத்தி, இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவது உறுதி செய்யப்படுகிறது.

அவ்வகையில் உள்ள Intimate Fashion Pvt Ltd பெண்கள் உள்ளாடை தயாரிப்பு நிறுவனம், புதுவாழ்வு திட்டத்தின் பயனாளிகளான 2500 பெண்களுக்கு பணி வழங்கியுள்ளது. பணியின் மூலம் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதை அப்பெண்களிடம் கலந்துரையாடல் செய்து அறிந்து கொண்ட உலக வங்கியின் தெற்கு ஆசிய மண்டலத்தின் துணை அதிபர் அவர்கள், புதுவாழ்வு திட்டத்தின் பணிகளைப் பாராட்டினார்.

இந்த நிகழ்வின் போது, உலக வங்கியின் இந்தியாவிற்கான இயக்குநர் திரு. ஹுக்கிம் அபிடோ அவர்கள், திட்டத்தின் தலைமை அலுவலர் திரு. சமிக்சுந்தர் தாஸ் மற்றும் சுமிலா ஆகியோர் உடன் இருந்தனர். புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வில், திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள் புதுவாழ்வு திட்டம் குறித்த பல்வேறு தகவல்களை அளித்தார்.

திறன் வளர்ப்பு வல்லுநர் திருமதி. கீதா, காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தனசேகரன், உதவித் திட்ட மேலாளர் திரு. சிவப்பிரகாசம் ஆகியோர் இந்த கள ஆய்விற்கு உரிய ஏற்பாடுகளை செய்திருந்தனர். ■

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

செய்யக்கூடாதவை	செய்ய வேண்டியவை
 திறந்த வெளியில் மலம் கழிக்காதீர்கள்.	 மலம் கழிக்க கழிப்பறையை பயன்படுத்துங்கள்.
நீரை காய்ச்சாமல் பருகாதீர்கள்.	கைகளை சோப்பால் கழுவுங்கள்.
மூடப்படாத உணவை உண்ணாதீர்கள்.	காலை – இரவு பல் துலக்குங்கள்.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல்நலத்தை காத்திடுவோம்!